## மத்திய,மாநில மற்றும் மத்திய ஆட்சிப்பகுதிகள்

| | |
|---|---|
| பிரிவு 1 | ஒன்றியத்தின் பெயரும் அதன் பரப்பும் |
| பிரிவு 2 | ஒரு புதிய மாநிலத்தைச் சேர்த்தல் அல்லது நிறுவுதல் |
| பிரிவு 2ஏ | சிக்கிம் இந்தியாவின் இணைப்பு மாநிலம் – நீக்கப்பட்டது |
| பிரிவு 3 | ஒரு புதிய மாநிலத்தை உருவாக்குதல், இருக்கும் மாநிலங்களின் பரப்புகள், எல்லைகள் மற்றும் பெயர்களை மாற்றுதல் |
| பிரிவு 4 | இருக்கும் மாநிலத்தின் பரப்பு முதலியவைகள் மாற்றப்பட்டாலோ, அரசியலமைப்பில் அவை தொடர்பான திருத்தங்களை பாராளுமன்றமானது எளிய பெரும்பான்மையின் (Simple Majority Parliament) அடிப்படையில் சட்டமாக இயற்றி நிறைவேற்ற வேண்டும். ஆனால் இந்த திருத்தம் சரத்து 368-ன் கீழான ஒரு அரசியலமைப்பு திருத்தமாக கருதப்படாது. |

மேற்கண்டவைகளை எவ்வாறு செய்வது என்பதற்குண்டான நடைமுறைகளும் (Procedures) சரத்து 3-ன் கீழாகவே கொடுக்கப்பட்டுள்ளன.

- சரத்து 2 மற்றும் 3 சட்டத்திற்குண்டான மசோதா (Bill) இந்திய குடியரசுத் தலைவரின் பரிந்துரையின் பேரில்தான் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப் பட வேண்டும்.
- எனினும், குடியரசுத் தலைவர் மேற்கண்டவாறு பரிந்துரை செய்வதற்கு முன்னர், மேற்படி மசோதாவால் பாதிப்பிற்குள்ளாகும் மாநிலத்தின் சட்டமன்றத்திற்கு அம்மாசோதா குறித்து அதன் கருத்துகளை தெரிவிப்பதற்காக அனுப்ப வேண்டும்.

## மாநிலங்கள் மற்றும் யூ னியன் பிரதேசங்களின் உருவாக்கம்

மாகாண மாநிலங்களின் ஒருங்கிணைவு:



அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- இந்திய சுதந்திரச் சட்டம் (1947) இந்தியாவை இரு சுதந்திர தனித்தனியான பகுதிகளாக பிரித்தது. மாகாண மாநிலங்கள் இவ்விரு பகுதிகளுடன் சேரவோ அல்லது தன்னிச்சையாக இருக்கவோ அதிகாரம் அளிக்கப்பட்டது.
- 552 மாகாண மாநிலங்களில், இந்திய புவியியல் எல்லைகளைக் கருத்தில் கொண்டு 3 மாகாண மாநிலங்களைத் தவிர 549- ஆம் இந்தியாவோடு இணைந்தன.

### அந்த 3 மாகாண மாநிலங்கள்:

1.ஹைதராபாத் – படையெடுப்பின் (Police action) மூலமும்
2. ஜீனாகாட் – பொது வாக்கெடுப்பு (referendum) மூலமும்
3. ஜம்மு-காஷ்மீர் – இணைப்பு ஒப்பந்தம் (Instrument of Accession) மூலமும் இந்தியாவுடன் இணைக்கப்பட்டன.

### 1950-இல் அரசியலமைப்பு ஆட்சிப்பரப்பை நான்கு பகுதிகளாகப் பிரிந்திருந்தது

1.ஆளுநருக்கு உட்பட்ட பகுதிகள் (9) 2. சட்டமன்றங்களை உடைய மாகாண மாநிலங்கள் (9) 3.தலைமை ஆணையருக்கு உட்பட்ட பகுதிகள் மற்றும் சில மாகாண மாநிலங்கள் (10) 4. அந்தமான மற்றும் நிகோபர் பகுதிகள்

### S.K தார் குழு (Dhar Commission) (1948)

1. மொழிவாரி மாநிலங்கள் அமைக்க முடிவதற்கான சூழல்களை ஆராய ஜூன் 1948-ல் இந்திய அரசால் அமைக்கப்பட்டது.
2. இக்குழுவின் தலைவர் ளு.மு. தார்.
3. டிசம்பர் 1948-இல் இக் குழு அறிக்கையை சமர்ப்பித்தது.
4. இக்குழு நிர்வாக வசதிகளின் அடிப்படையிலேயே இந்தியா பிரிக்கப்பட்ட வேண்டுமேயன்றி மொழியின் அடிப்படையில் பிரிக்கக் கூடாது என்று கருத்து தெரிவித்தது.

### ஜே.வி.பி. (J.V.P) குழு (1948)

- தார் குழுவின் அறிக்கை திருப்தி அளிக்காததால் இக்குழு காங்கிரஸால் டிசம்பர் 1948-இல் அமைக்கப்பட்டது.
- J – Jawaharlal Nehru
- V – Vallabhai Patel
- P – Pattabhi Sitaramayya
- ஏப்ரல் 1949-இல் அறிக்கை சமர்ப்பித்த இக் குழுவும், மொழிவாரி மாநிலங்கள் பகுப்பதை நிராகரித்தது.
- எனினும் பொட்டி ஸ்ரீராமுலு என்பவர் தனி ஆந்திர மாநிலம் கேட்டுப் போராடி 56 நாட்கள் உண்ணா நோன்பிருந்து பின்பு 1953-இல் சென்னை மாகாணத்தில் இருந்து தெலுங்கு பேசும் பகுதிகள் பிரிக்கப்பட்டு முதல் மொழிவாரி மாநிலமாக ஆந்திரா உருவானது.

### பசல் அலி குழு (Fazl Ali Committee) (1953)

- இந்திய அரசாங்கம் டிசம்பர் 1953-ல் 3-நபர்களைக் கொண்ட மாநில மறுசீரமைப்பு கமிஷனை நியமித்தது.
- தலைவர் :1. பசல் அலி
- உறுப்பினர்கள் :2. கே.எம். பணிக்கர், 3. கே.என். குன்ஷ்ரு
- இக்குழு மொழிவழி மாநில மறுசீரமைப்பை ஏற்றுக்கொண்டது. ஆனால் ஒரு மொழி – ஒரு மாநிலம் என்னும் கொள்கையை நிராகரித்தது.
- இக்குழுவின் பரிந்துரையின் படி மாநில மறுசீரமைப்புச் சட்டம் (1956) நிறைவேற்றப்பட்டது.

### மாநில மறுசீரமைப்புச் சட்டம் (1956)

- 7-ஆவது சட்டத் திருத்தம், 1956 மற்றும் மாநில மறுசீரமைப்புச் சட்டம் 1956-ன் கீழ் 14 மாநிலங்களும், 6 யூனியன் பிரதேசங்களும் நவம்பர் 1, 1956-இல் உருவாக்கப்பட்டன.
- 15-ஆவது மாநிலமாக குஜராத் 1960-இல் உருவாக்கப்பட்டது.

### 1956-ஆம் ஆண்டிற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| ஆண்டு | மாநில ஃ யூனியன் பிரதேசம் | அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் | எத்தனையாவது மாநிலம் |
|---|---|---|---|
| 1960 | குஜராத் | | 15-வது மாநிலம் |
| 1961 | தாத்ரா மற்றம் நாகர் ஹவேலி | 10-வது அரசியலமைப்புத் திருத்தம் | |
| 1962 | கோவா, டாமன் மற்றும் டையூ | 2-வது அரசியலமைப்புத் திருத்தம் | |
| 1962 | பாண்டிச்சேரி | 14-வது அரசியலமைப்புத் திருத்தம் | |
| 1963 | நாகாலாந்து | | 16 |
| 1966 | ஹரியானா | | 17 |
| 1971 | இமாச்சலப் பிரதேசம் | | 18 |
| 1972 | மணிப்பூர் | | 19 |
| | திரிபுரா | | 20 |
| | மேகாலயா | | 21 |
| 1975 | சிக்கிம் | 34 மற்றும் 35 | 22 |
| 1987 | மிசோரம் | | 23 |
| | அருணாச்சல பிரதேசம் | | 24 |
| | கோவா | | 25 |


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | | | |
|---|---|---|---|
| 2000 | சத்தீஸ்கர் | | 26 |
| | உத்ராஞ்சல் | | 27 |
| | ஜார்கண்ட் | | 28 |

## பெயர் மாற்றங்கள்

| எண் | ஆண்டு | பழைய பெயர் | புதிய பெயர் |
|---|---|---|---|
| 1 | 1950 | ஐக்கிய மாகாணம் | உத்திரப்பிரதேசம் |
| 2 | 1969 | மெட்ராஸ் | தமிழ்நாடு |
| 3 | 1973 | மைசூர் | கர்நாடகம் |
| 4 | 1973 | லட்சத்தீவுகள், மினிகாய் மற்றும் அமிண்டிவி தீவுகள் | லட்சத்தீவுகள் |
| 5 | 1992 | டெல்லி யூனியன் பிரதேசம் | டெல்லி தேசிய நகரப் பிரதேசம் – டெல்லி |
| 6 | 1995 | பம்பாய் | மும்பை |
| 7 | 1996 | மெட்ராஸ் | சென்னை |
| 8 | 2000 | கல்கத்தா | கொல்கத்தா |
| 9 | 2006 | உத்திராஞ்சல் | உத்தரகாண்ட் |
| 10 | 2006 | பெங்களூர் | பெங்களூரு |
| 11 | 2007 | பாண்டிச்சேரி | புதுச்சேரி |


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in